

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2023) திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் 91–வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ், ஆசிரியர் கி.வீரமணி அவர்களின் மனைவி திருமதி வீ. மோகனா அம்மையார் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## நீட் விலக்குக் கோரி

# 55 லட்சம் கையெழுத்து!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, டிச.4-

நீட் விலக்கை வலியுறுத்தி, தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது.



50 லட்சம் கையெழுத்துக்களைப் பெற வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இதுவரை 55 லட்சம் கையெழுத்துக்கள் பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த கையெழுத்து நீட் விலக்குப் பெறுவதற்கு அடித்தளமாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (02.12.2023) முகாம் அலுவலகத்தில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்து பெற்றார்.



சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையத்தில் டிசம்பர் மாதம் 17 ஆம் தேதி கழக இளைஞரணி 2 வது மாநில மாநாடு நடைபெறும் பணிகளை அமைச்சர் முத்துசாமி, கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் செல்வராஜ் ஆகியோர் பார்வையிட்டனர். அதுபோது கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜோயல், சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, சிவராமன், மருதமுத்து, பேரூர் செயலாளர்கள் பாபு (ஏ) வெங்கடேஷ்வரன், வெங்கடேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## அதிகாரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படும்

# எல்லை மீறிய அதிகாரங்கள் அழிவைத் தரும்!

## ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி கருத்து!

சென்னை, டிச.4-

**“அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்கள் அந்த நிறுவனங்களையே அழித்துவிடும்” என்று மதுரையில் அமலாக்கத்துறை அதிகாரி லஞ்ச வழக்கில் கைது செய்யப்பட்டிருப்பது குறித்து ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி அனில்ஸ்வரப் தமது ட்விட்டர் பதிவில் கருத்து தெரிவித்துள்ளார்.**

ஒன்றிய அரசின் மதுரை அமலாக்கத் துறை அலுவலகத்தில் அலுவலராகப் (Enforcement Officer) பணி புரிந்து வரும் அங்கித் திவாரி (Ankit Tiwari) என்பவர் கடந்த 29.10.2023 அன்று திண்டுக்கல்லைச் சேர்ந்த அரசு ஊழியர் ஒருவரை தொடர்பு கொண்டு அவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் பதிவு செய்யப்பட்டு முடிந்து போன வழக்கை சுட்டிக்காட்டி, அவ்வழக்கில் அமலாக்கத் துறை விசாரணை நடத்த வேண்டுமென பிரதமர் அலுவலகத்திலிருந்து உத்தரவு வந்துள்ளதாகவும். 30.10.2023 அன்று மதுரை அமலாக்கத் துறை அலுவலகத்திற்கு விசாரணைக்கு வரவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

### வாட்ஸ்அப் – குறுஞ்செய்திகள் மூலம் மிரட்டல்!

அதன்படி, அந்த அரசு ஊழியர் மதுரைக்குச் சென்றபோது. அங்கித் திவாரி. அரசு ஊழியரின் காரிலேயே ஏறிக் கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இருக்க ரூ.3 கோடி தரவேண்டும் என்றும், பின்னர் தனது உயரதிகாரிகளோடு பேசுவதாகத் தெரிவித்துவிட்டு இறுதியாக ரூ.51 லட்சம் தரவேண்டும் என்றும் பேரம் பேசி உள்ளார்.

கடந்த 01.11.2023 அன்று அரசு ஊழியர் முதல் தவணையாக ரூ.20 லட்சம் பணத்தை அவரிடம் வழங்கி உள்ளார். பின்னர், மேல் அதிகாரிகளுக்கும் பங்கு தர வேண்டி உள்ளதால் பேசியபடி முழுத்தொகையான ரூ.51 லட்சத்தையும் தரவேண்டும் என்றும். இல்லையென்றால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் தொடர்ந்து வாட்ஸ்அப் மூலமும், குறுஞ்செய்திகள் மூலமும் மிரட்டியுள்ளார்.

இவரது நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த அந்த அரசு ஊழியர் 30.11.2023 அன்று திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவில் புகார் அளித்தார்.

முதற்கட்ட விசாரணையில் அங்கித் திவாரி அமலாக்கத் துறை அதிகாரி என்றும், தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அரசு ஊழியரை மிரட்டி பணம் வசூலித்துள்ளார் என்றும் தெரிய வந்ததால் அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு இரண்டாவது தவணையாக 01.12.2023 அன்று காலை 10.30 மணியளவில் ரூ.20 லட்சம் லஞ்சப்பணத்தைப் பெற்றுக் கொண்டபோது அவர் கையும், களவுமாகப் பிடிபட்டார்.

### சோதனையின்போது முக்கிய ஆவணங்கள் சிக்கின!

அதனைத் தொடர்ந்து அங்கித் திவாரியின் வீடு மற்றும் மதுரையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகம் ஆகியவற்றில் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இச்சோதனையின்போது இவருக்குத் தொடர்புடைய பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

மேலும் இவர் அமலாக்கத்துறையின் பெயரில் எவரேனும் மிரட்டியோ அல்லது அச்சுறுத்தியோ இதேபோன்ற யுக்தியைப் பயன்படுத்தி கோடிக்கணக்கில் பணம் பெற்றுள்ளாரா என்ற கோணத்திலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த குற்ற நிகழ்வில் பிற அமலாக்கத் துறை அலுவலர்களுக்குத் தொடர்புள்ளதா என்பது குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த வழக்கு விசாரணையின் தொடர்ச்சியாக அங்கித் திவாரிக்கு தொடர்புடைய இதர இடங்களிலும் சோதனைகள் மேற்கொள்ள லஞ்ச ஒழிப்புத்துறை தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதுகுறித்து ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அனில்ஸ்வரப் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:-

நிறுவனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படும் எல்லை மீறிய அதிகாரங்கள் அந்த நிறுவனங்களையே அழித்து விடும்.

நிறுவனங்களை அரசியல் ரீதியாக பழிதீர்க்க பயன்படுத்தும் போது அது நிலைமையை இன்னும் மோசமாக்கும். இந்த நிலைமை கைவிட்டுப் போவதற்குள் சம்பந்தப்பட்டவர்கள் இதுகுறித்து தீவிரமாக ஆலோசிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் திப்பிராஜபுரம் ஊராட்சியில் பால் உற்பத்தியாளர்களுக்கு கறவை மாட்டு கடன் உதவித் தொகைக்கான ஆணையினை பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் 01.12.2023 அன்று வழங்கினார். அருகில் மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் க.அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.உஷா புண்ணியமூர்த்தி, கும்பகோணம் மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

